பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9 Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


My No: NP/09/FRM/R2/10/Pro.Cir.Rev/2026 01.06.2026

மாகாண நிதிச் சுற்றுநிருப இல : **PF/04/2026**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்

## <u>எரிபொருள் நெருக்கடியின் போது அரச செலவின முகாமைத்துவம்</u>

மேற்படி விடயம் தொடர்பாக, 01/2026 ஆம் இலக்க 02.04.2026 ஆம் திகதிய பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அ. மேற்படி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைவாக, எரிபொருள் கொடுப்பனவுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற கொடுப்பனவுகளை, அச்சுற்றிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி 01.03.2026 அன்று நிலவிய எரிபொருள் விலைக்கேற்ப கணிப்பிட்டு, அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆ. அரசாங்க வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வாகனங்களின் (Assign) மேலதிக பாவனையின் போதான எரிபொருளுக்கான மீள்நிரப்புதல்களை அரசாங்கத்தினால் அவ்வப்போது அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எரிபொருள் விலையின் அனுமதியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் சிட்டைகளுக்கான மீள்நிரப்புதலாக (Reimbursement) வழங்குவதற்கு கௌரவ ஆளுநர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தனுஜா முருகேசன்,
பிரதம செயலாளர்,
வடமாகாணம்

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதி: -

1) ஆளுநரின் செயலாளர் - வ.மா
2) சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
3) பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா

} தகவலுக்காக

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: MF/NB/08/CM/2026/107
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.04.02

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல.: 01/2026**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
விசேட செலவின அலகுகள் மற்றும் ஆணைக்குழுக்களின் தலைவர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்
அணைவருக்கும்,

**<u>எரிசக்தி நெருக்கடியின் போது அரச செலவின முகாமைத்துவம்</u>**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தொடரும் யுத்த சூழ்நிலையினால் ஏற்பட்டுள்ள பாதகமான பொருளாதாரத் தாக்கத்தைத் தணிப்பதற்கும், அத்தியாவசிய அரச சேவைகள் தொடர்வதை உறுதி செய்வதற்கும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தற்போதைய நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் செலவின வரையறைகளுக்குள் அரச செலவினங்களை நிர்வகிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

02. எரிபொருள் விநியோகம் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் அரசாங்க அலுவலகங்களுக்கு புதன்கிழமையினை விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அலுவலர்கள் மற்றும் பிற தகுதியுடையோருக்கு உரித்தான எரிபொருள் கொடுப்பனவானது, மறு அறிவித்தல் வரை, 2026 மார்ச் 01 அன்று நிலவிய எரிபொருள் விலையின் அடிப்படையில் வழங்கப்படும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

03. எரிபொருள் கொடுப்பனவுகளுக்குப் பதிலாக எரிபொருளின் அளவு மற்றும் விலையினை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுளும் 2026.03.01 அன்று நிலவிய எரிபொருள் விலைக்கேற்பவே கணக்கிடப்படுதல் வேண்டும்.

04. அதன்படி, தற்போது நடைமுறையிலுள்ள எரிபொருள் அளவுகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கிணங்க, உரித்துடைய எரிபொருள் அளவுகள் மற்றும் எரிபொருள் கொடுப்னவுகள் தொடர்பாக, மேற்படி 02 மற்றும் 03 ஆம் பந்திகளுக்கமைய நடவடிக்கை எடுக்குமாறு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெறும**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. தலைவர், நிதி ஆணைக்குழு
5. கணக்காய்வாளர் நாயகம்